(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )
மாணவ-மாணவியருக்கு மட்டும்)

SUBJECT CODE 22 UTM 101

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் – 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 50**

**முதல் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – III

## இக்கால இலக்கியம்

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. புலிக்கொடியும் மீன்கொடியும் நின்று சால்புறக் கண்டவரின் தாய்நாடு எது?
   (அ) இலங்கை (ஆ) கடாரம் (இ) கலிங்கம் (ஈ) தமிழ்நாடு
2. நிழலின் விலை – சிறுகதையின் ஆசிரியர் யார்?
   (அ) புதுமைப்பித்தன் (ஆ) அறிஞர் அண்ணா
   (இ) ஜி. மீனாட்சி (ஈ) நா. விஸ்வநாதன்
3. பெரிய கொம்பனின் கழுத்தில் தந்தத்தால் முட்டித் தள்ளியது எது?
   (அ) புதிய கொம்பன் (ஆ) பொன்னி
   (இ) கதிரேசன் (ஈ) காளியண்ணன்
4. இளவழகன் பதிப்பாளரிடம் எத்தனை மாதங்களில் அகராதித் தொகுப்பை முடித்துத் தருவதாகக் கூறியிருந்தார்?
   (அ) இரண்டு (ஆ) ஐந்து (இ) மூன்று (ஈ) எட்டு
5. காதைகளின் பெயர்களைப் பெரும்பாலும் தொழிற்பெயராகக் கொண்டமைந்த காப்பியம்
   (அ) சிலப்பதிகாரம் (ஆ) சூளாமணி (இ) பெருங்கதை (ஈ) நீலகேசி

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. வெள்ளம் எதன்பொருட்டு வெளிநடப்புச் செய்தது?
7. அம்மாளு எதற்காக முக்கால் ரூபாய் சம்பாதித்தாள்?
8. மாசய்யா வயிற்று வலிக்கான மருந்தை எங்ஙனம் தயாரித்தார்?
9. இளவழகன் அகராதி பற்றிக் கூறியதைக் கேட்ட மரியநாதன் கூறியது யாது?
10. இலக்கியம் நுழையாத செவிகளை ஔவையார் எங்ஙனம் நிந்திக்கிறார்?

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

**பகுதி – ஆ** (5 x 3 = 15 மதிப்பெண்கள்)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) வாழ்க்கைத் தத்துவங்கள் எனும் தலைப்பிலமைந்த கவிதைப் பொருளைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) தமிழின் சிறப்பை நாமக்கல் கவிஞர் எங்ஙனம் எடுத்துரைத்துள்ளார்?

12. அ) பேய் ஓடிப்போச்சு – சிறுகதையின் கருப்பொருளைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) பொம்மை – சிறுகதை சித்திரிக்கும் சமூக வாழ்க்கை பற்றி விளக்குக.

13. அ) வலசை நாவலின் மையப்பொருண்மை பற்றிக் கருத்துரைக்க.

(அல்லது)

ஆ) வலசை நாவலில் யானைகளுக்கும் மனிதர்களுக்குமிடையேயான முரண் எங்ஙனம் சித்திரிக்கப் பெற்றுள்ளது?

14. அ) இன்று மழை பெய்யும் – நாடகத்தின்வழி நீவிர் கண்டடைந்த கருத்துகளை எடுத்துரைக்க.

(அல்லது)

ஆ) இன்று மழை பெய்யும் – நாடகத்தில் இடம்பெறும் வசந்தாவின் பாத்திர வார்ப்புக் குறித்து எழுதுக.

15. அ) பழமொழிகளின் சிறப்புகளை அமுதன் எங்ஙனம் எடுத்துரைத்துள்ளார்?

(அல்லது)

ஆ) நூல்கள் நல்ல நண்பர்கள் என்பதை நும் பாடப்பகுதி வழி விளக்குக.

பகுதி – இ (5 x 5 = 25 மதிப்பெண்கள் )

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K4/ K5 )

16. அ) குடும்ப விளக்கு - பெண்ணின் ஒருநாள் செயல்களை எங்ஙனம் எடுத்துரைக்கிறது? விவரிக்க.

(அல்லது)

ஆ) புத்தனின் தலையில் நூற்றி எட்டு நத்தைகள் – ஹைக்கூ கவிதைத் தொகுப்பைத் திறனாய்க.

17. அ) நிழலின் விலை – சிறுகதையின் உள்ளடக்கத்தைப் பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) நும் பாடப் பகுதியாக அமைந்த சிறுகதைத் தொகுப்பின் உள்ளடக்கங்கள் பற்றி விவரித்தெழுதுக.

18. அ) வலசை நாவல் குறித்துத் திறனாய்க.

(அல்லது)

ஆ) வலசை நாவலின் வழி நீவிர் அறிந்தனவற்றைத் தொகுத்துரைக்க.

19. அ) இன்று மழை பெய்யும் – நாடகப் பாத்திரங்களில் உம்மைக் கவர்ந்த பாத்திரங்களைப் பற்றி விவரித்துரைக்க.

(அல்லது)

ஆ) இன்று மழை பெய்யும் – நாடகத்தின் உள்ளடக்கத்தைப் பற்றிக் கட்டுரைக்க.

20. அ) புதுக்கவிதையில் சமுதாய நோக்கம் வெளிப்படுமாற்றை அமுதன் எங்ஙனம் தெளிவுபடுத்தியுள்ளார்?

(அல்லது)

ஆ) கற்றதனால் ஆய பயன் – கட்டுரை உணர்த்தும் செய்திகளை விவரித்து எழுதுக.

********